ஆசிரியர்/பொறுப்பாளர் தேனீ இணையத் தளம்

அவதூறுகளுக்குப் பதில் எழுதுவதில் பயனில்லை என்பதுதான் எனது நிலைப்பாடாக இருந்தது. எனினும் கடந்த பல வாரங்களாக உங்கள் இணையத் தளத்தூடாக அவதூறுகளும் குற்றச்சாட்டுகளும் அடிக்கடி என் மீது வீசப்பட்டு வருகின்றன.

அதனுடைய தொடர்ச்சியாக 23.4.2006 அன்று க.மகாதேவன் என்பவர் எழுதிய கட்டுரை உங்கள் இணையத் தளத்தில் வெளியாகியுள்ளது. இந்தக் கட்டுரை அவதூறுகளுக்கு "ஆய்வுரீதியான" ஆதாரங்கள் உள்ளன என்ற தொனியில் எழுதப்பட்டுள்ளது.

அந்தக் கட்டுரை குறித்தும் என் தொடர்பாக நீங்கள் வெளியிட்டிருக்கும் ஏனைய சில குறிப்புகள் தொடர்பாகவும் இந்த மறுப்பை எழுதுகிறேன். இதழியல் அறம் சார்ந்து என்னுடைய மறுப்பை முற்றும்முழுதாகவும் நிறைவாகவும் வெளியிடுவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

முதலில் என்னைப்பற்றி க.மகாதேவன் என்பவர் எழுதியுள்ள அப்பட்டமான பொய்களைப் பார்க்கலாம்.

1. 2003ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்துக்குச் சென்று நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்றியிருந்தேன் என்று அவர் எழுதுகிறார். அப்படி எந்தவிதமாக நேர்முகப் பரீட்சைகளுக்கும் நான் தோற்றவில்லை. அந்தப் பல்கலைக்கழகத்தில் எந்த விரிவுரையாளர் பதவிக்கும் நான் விண்ணப்பிக்கவும் இல்லை. இதற்கு மாறான யாழ் பல்கலைக் கழக ஆவணங்கள் அல்லது ஆதாரங்கள் இருந்தால் அவற்றை பகிரங்கமாக வெளியிடுவதே நேர்மையான ஒருவர் செய்ய வேண்டும். அதனைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். யாழ் பல்கலைக்கழகத்தில் குறைந்தபட்சம் அதிதி விரிவுரையாளராக வருவதுதான் என் ஆசை என்றும் அதற்காகத்தான் புலிகள் ஆதரவு நிலைப்பாட்டை நான் மேற்கொள்ள வேண்டி இருக்கிறது என்றும் அவர் மேலும் சேறு பூசுகிறார். 1989ம் ஆண்டு ஒல்லாந்தில் இருந்து பட்டமேற் படிப்பை முடித்து விட்டு யாழ் திரும்பிய பிற்பாடு கொஞ்சக் காலம் வேலை இல்லாமல் இருந்தேன். அந்தக் கால கட்டம் இந்திய ராணுவம் இலங்கையில் இருந்த கால கட்டமாகும். அப்போது அரசியல் விஞ்ஞானத் துறையில் யாழ் பல்கலைக்கழகத்தில் விண்ணப்பித்திருந்தேன். நேர்முகப் பரீட்சைக்கும் சென்றிருந்தேன். காலஞ்சென்ற துணைவேந்தர் துரைராஜா, தற்போதைய பொருளியல் பேராசிரியர்களான வி.நித்தியானந்தன் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோர் நேர்முகத் தேர்வில் இருந்தவர்கள். என்னுடைய முதலாவது பட்டம் உயிரியல் விஞ்ஞானத் துறையில் என்பதால் பல்கலைக்கழகத்தில் எனக்குப் பதவி தரப்படவில்லை. எனினும் அதிதி விரிவுரையாளராகப்(visiting lecturer) பணிபுரியுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டேன். அதனை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. க.மகாதேவன் கருதுவதுபோல என்ன செய்தாவது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகியே தீருவது என்ற "பனங்கொட்டைக் கனவு" எதுவும் எனக்குக் கிடையாது என்பதை மிகுந்த தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2. கலாநிதி பட்டப்படிப்பை கனடாவில் மேற்கொள்வதற்கான புலமைப் பரிசிலை எனக்குப் பெற்றுத் தந்தவர் நீலன் திருச்செல்வம் என்று இன்னுமொரு மகா பொய்யையும் அவிழ்த்து விடுகிறார் மகாதேவன். கனடாவின் யோர்க் பல்கலைக்கழகத்துக்கு கலாநிதி பட்டப்படிப்புக்கான நான் விண்ணப்பித்தபோது எனது விண்ணப்பத்தை வழிமொழிந்து புலமைக் கடிதங்கள் (letters of reference) அனுப்பியதன் மூலம் எனக்குப் புலமைப் பரிசில் கிடைக்கத் துணை புரிந்தவர்கள் காலஞ்சென்ற பேராசிரியர் ஏ.ஜே.வில்சனும் கலாநிதி குமாரி ஜெயவர்த்தனவும்தான். நீலன் திருச்செல்வம் அல்ல. கனடாவுக்கு வருவதற்கு முன்பாக ஐசிஈஎஸ்(ICES) பணிபுரிந்தேன். இன்றுவரையும் ஐசிஈஎஸ் நிறுவனத்துடனான என்னுடைய உறவு தொடர்கிறது என்பது மட்டுமல்ல, இப்போதும் அந்த நிறுவனத்தில் ஓர் ஆய்வாளர் ஆகவும் (research fellow) இருக்கிறேன் என்பது ரகசியமே அல்ல. நீலன் திருச்செல்வத்தை விடுதலைப் புலிகள் படுகொலை செய்ய பிற்பாடு ஐசிஈஎஸ் நிறுவனத்துடன் தொடர்புகொள்ளப் பயந்து ஒதுங்கிய பலரை நான் அறிவேன். ஆனால் என்னுடைய

*நிலைப்பாடு அத்தகைய கோழைத்தனம் கொண்டது அல்ல.*

*3. 1984-1987 பகுதியில் சர்டர்டே ரிவ்யூ இதழில் நான் என்ன பணி புரிந்தேன் என்பது கட்டுரையாளருக்கு ஒரு விசித்திரமான சந்தேகமாக இருக்கிறது. 1984ல் காமினி நவரத்னவும் ஏ.ஜே.கனரத்னாவும் சர்டர்டே ரிவ்யூவினுடைய ஆசிரியர் பீடத்தில் என்னைச் சேர்த்துக்கொண்டபோது ஆசிரியர் பகுதி உதவியாளராக (editorial assistant) பொறுப்புத் தரப்பட்டது. 1987 ஜூலையில் என்னுடைய பொறுப்பு இணை ஆசிரியர் என்பதாக இருந்தது. 1987ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரண்டாம் வாரம் வெளியான சர்டர்டே இதழில், நான் ஒல்லாந்து புறப்பட்ட பிற்பாடு வெளியான ஒரு குறிப்பில் இது தெளிவாக இருக்கிறது. அந்தக் குறிப்பை ஏ.ஜே.கனகரத்னம் எழுதியிருந்தார். நான் ஒல்லாந்துக்கு மேற்படிப்பு படிக்கச் சென்றமை தொடர்பான குறிப்பு அது. "Like father like son" என்ற தலைப்பில் அது வெளியாகி இருந்தது. க.மகாதேவன் தெய்வமாக நினைத்துப் போற்றுகிற ராஜன் கூலிடம் பழைய சர்டர்டே ரிவ்யூ இதழ்கள் உள்ளன. எடுத்துத் தேடிப் பார்க்கலாம்.*

*4. பிப்ரவரி 17, 2002 நிகரி இதழில் வெளியான எனது கட்டுரையின் ஒரே ஒரு வசனத்தை மட்டுமே எடுத்துக்காட்டி என்னைப் புலிகளின் விசுவாசி என்று முத்திரை குத்தப் பார்க்கிறார் மகாதேவன். அவருக்குக் குறைந்த அளவு நேர்மையாவது இருந்திருந்தால் அந்தக் கட்டுரை எதனைப் பற்றியது என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அந்தக் கட்டுரை கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பில் சிறுவர்களை வலுக்கட்டாயமாக தமது படையணிகள் விடுதலைப் புலிகள் சேர்ப்பது பற்றிய கண்டனக் கட்டுரை. ஆதாரங்களோடும் தகவல்களோடும் எழுதப்பட்ட கட்டுரை அது.*

*அதே காலப்பகுதியில் UTHR(J)யும் அதுபற்றிய அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தமையால் UTHR(J)க்கும் எனக்கும்/ எமது பத்திரிகைக்கும் இடையேயான கருத்தியல் உடன்பாடின்மையைச் சுட்டிக்காட்ட வேண்டியிருந்தது. UTHR(J)ன் ஆரம்ப காலகட்டங்களிலும் பின்னரும்கூட அவர்களுடைய அறிக்கைகளையும் தகவல்களையும் கணிசமான அளவு தமிழில் மொழிபெயர்த்து சரிநிகரில் வெளியிட்டிருந்தோம். அவர்கள் தருகிற தகவல்களில் பெரும்பாலானவை நன்கு விசாரித்து ஒழுங்காகத் தரப்படுபவை என்பது பற்றி எனக்கு இப்போதும் மறுப்பு இல்லை. ஆனால் சந்திரிகா அரசு பதவி ஏற்ற பிற்பாடு அவர்கள் அந்த அரசின் ஆதரவு நிலைப்பாட்டை எடுத்தார்கள்.*

*ராவய என்னும் சிங்கள இதழின் ஆசிரியர் விக்டர் ஐவன் ஆங்கிலத்தில் நடத்தி வந்த Counter Point இதழில் ராஜன் கூல் அவர்கள் தொடர்ச்சியாக எழுதி வந்த Tamil point of view என்ற பத்தியில் "தமிழர்களுக்கு இப்போதுள்ள நம்பிக்கை சந்திரிகா அரசு மட்டுமே" என்று எழுதியிருந்தார். பிற்பாடு யுத்தம் ஆரம்பித்தபோது, அதனை வழிமொழிந்து ஓர் அறிக்கையையும் UTHR(J) வெளியிட்டிருந்தனர். அந்த அறிக்கையைக் கண்டித்து "யுத்தம். ஆம்! சமாதான முகத்துடன்" என்ற கண்டனக் கட்டுரையை சரிநிகரில் வெளியிட்டிருந்தோம். எழுத்தாளர்/கலைஞர்/மனித உரிமைவாதிகள் எந்த அரசையும் எந்தக் கட்சியையும் ஆதரிக்க முடியாது என்பது எனது நிலைப்பாடு. இன்னும் முக்கியமாக மனித உரிமைகள் சங்கம் என்று வருகிற பொழுது எத்தகைய அரசு சார்பையும் அவர்கள் எடுக்க முடியாது. எப்போது UTHR(J) இந்த நடுநிலைமையில் இருந்து தவறிற்றோ அன்றிலிருந்து எனது விமர்சனங்கள் எழுந்தன. அவை அரசியல் சார்ந்தன.*

*UTHR(J)க்கு உறுதுணையாக இருந்த ராம்.மாணிக்கலிங்கம், மனோரஞ்சன் போன்றவர்கள் வெளிப்படையாகவே சந்திரிகா அரசை ஆதரித்துச் செயல்பட்டவர்கள். ராம்.மாணிக்கலிங்கம் சந்திரிகாவினுடைய ஆலோசகராக சந்திரிகா பதவியிலிருந்து விலகும்வரை பணிபுரிந்தவர். மனோரஞ்சன் இலங்கை அரசாங்கத்தின் தொலைக்காட்சி நிறுவனத்திலும் லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்திலும் முக்கிய பொறுப்பில் சந்திரிகா அரசால் நியமிக்கப்பட்டவர். யாழ்ப்பாணத்தை இலங்கைப் படையினர் கைப்பற்றிய பிற்பாடு, அங்குள்ள மக்கள் பிரஜைகள் குழுக்களை அமைத்து இலங்கை ராணுவத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என்று துண்டுப் பிரசுரம் அடித்தவர்கள். இவற்றைத்தான் அரசியல் காரணங்கள் என்று நான் குறிப்பிட்டேன். UTHR(J)ம் மகாதேவனும் அவை போன்றவர்களும் புலிகளைப் பாசிஸ்டுகள் என்று சொல்லலாம். பாசிஸ்டுகளுடன் பேச்சு வார்த்தை நடத்த முடியாது. பேய்களுடன்*

சேர்ந்தாவது அவர்களை அழிக்க வேண்டும் என்பதே தயான் ஜெயதிலக போன்ற பலரின் கருத்தாக இருக்கிறது. தமிழ் இயக்கங்கள் பலவும் புலிகளை விமர்சிக்கிற பலரும் புலிகளின் முற்றும் முழுதான அழிவுக்குப் பிற்பாடுதான் தமிழ் மக்களுக்கு விடுதலையும் ஜனநாயகமும் கிடைக்கும் என்று நம்புகிறார்கள். பாசிஸம் என்று இவர்கள் கருதுவதை, பாசிஸத்தை அழிப்பதற்கு பாசிஸத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படுகின்ற விளைவுகள் பற்றி இவர்கள் அக்கறைப்படுவதில்லை. ஜனநாயகத்தையும் விடுதலையையும் ஒருபோதுமே மேலிருந்து திணிக்க முடியாது.

2002 நிகரி கட்டுரையில் நான் அம்பலப்படுத்திய சம்பவங்கள் நிகழ்ந்தபோது விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதியாக இருந்தவர் இப்போது உங்களுடைய இணையத் தளம் போற்றித் துதிக்கின்ற கருணா அம்மான். கிழக்கின் பல படுகொலைகளுக்கும் வலுக்கட்டாயமாகச் சிறுவர்களைச் சேர்த்தமைக்கும் முஸ்லிம்களின் படுகொலைக்கும் அவரும் பொறுப்பெடுக்க வேண்டும். அந்தக் காலகட்டத்துக்கான அனைத்துப் போர்க் குற்றங்களையும் கருணாமீது சுமத்தி விட்டு புலிகள் தப்பித்துக்கொள்ள முடியாது என்றாலும் அப்பழுக்கற்ற தூய விடுதலைப் போராளி கருணா என்று இப்போது உங்கள் பலர் உருவாக்கி வருகிற பிம்பத்தையும் உடைக்க வேண்டியுள்ளது. அதனை நீங்கள் செய்ய முன்வருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. அப்படியிருந்தால் இத்துடன் நான் அனுப்புகின்ற கிழக்கு மாகாண அறிக்கையை வெளியிட்டு உங்கள் நடுநிலைமையைக் காட்டலாம்.

இந்த அறிக்கை பக்கச் சார்பின்றி தமிழீழ விடுதலைப் புலிகள், கருணாவின் தமிழீழ விடுதலைப் புலிகள், இலங்கை படையினர் ஆகிய மூன்று தரப்பினரதும் வன்கொடுமைகளை ஆவணப்படுத்துவது.

5.கட்டுரையாளர் ஈபிடிபியினரின் செல்லப்பிள்ளையாக இருந்தவன் நான் என்று குறிப்பிடுகிறார். இது மற்றுமொரு அப்பட்டமான பொய். நான் திருப்பித் திருப்பி வலியுறுத்துவதுபோல எந்தக் கால கட்டத்திலும் எந்தக் கட்சியிலும் நான் உறுப்பினராகவோ ஆதரவாளனாகவோ இருந்ததில்லை.

ஈபிடிபியின் டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் ஈரோஸ் பின்னாள் ஈபிடியின் சின்னபாலா, ஈபிஆர்எல்எஸ்-இன் வரதராஜப் பெருமாள், பத்மநாபா, விடுதலைப் புலிகளின் வெ.பாலகுமாரன், கிட்டு, சந்தோஷம் போன்ற ஏராளமான இயக்கத் தலைவர்கள், இயக்க உறுப்பினர்கள் போன்றவர்களுடன் எனக்கு நட்பு இருந்தது. இன்னும் இருக்கிறது. அரசியல் முரண்பாடுகளுக்கு அப்பால் நட்பைப் பேண முடியும் என்ற நம்பிக்கை எனக்கு எப்போதும் இருந்து வந்திருக்கிறது. ஈபிடிபியின் ரமேஷ் (அற்புதன்) இலங்கை அரசின் பத்திரிகையான தினகரனில் புல்லட் பாக்ஸ் என்ற பத்தியை எழுதி வந்தார். அந்த நேரம் அவர்களுக்கும் எங்களுக்கும் இருந்த மோதலையும் அதற்குப் பிற்பாடு இலங்கை அரசின் தமிழ்த் தணிக்கை அதிகாரியாக ஈபிடிபியின் சின்னபாலா நியமிக்கப்பட்டபோது எங்களுக்கும் அவர்களுக்கும் ஏற்பட்ட முரண்பாடுகளையும் மோதல்களையும் மகாதேவன் வசதியாக மறைத்து விடுகிறார். இந்தக் காலகட்டப் பகுதியில் மகாதேவன் கொழும்பில் இருந்திருக்கிறார் என்பது அவருடைய கட்டுரையில் இருந்து தெரிய வருகிறது.

மகாதேவனின் திரிப்புகள்

1. என்னுடைய தீராநதி பேட்டி, திசைகள் பேட்டி பற்றியும் கருத்தும் உருபும் திரிந்த நிலையில் எழுதிச் செல்கின்றார் கட்டுரையாளர். நியாயமாக அவர் செய்திருக்க வேண்டிய பேட்டிகள் முற்றும் முழுதாகக் கிடைக்கின்ற இணையத் தளத்தையாவது சுட்டிக் காட்டியிருக்க வேண்டும். விரிவான பல கருத்துகள் கூறப்பட்டிருக்கும் ஒரு பேட்டியில் தமது வசதிக்கேற்றபடி குரங்கு பூமாலையைப் பிய்த்து உதறுவதுபோல உதற முடியாது. நவம்பர் 2005 திசைகள் இதழில் வெளியான என்னுடைய பேட்டியைப் படிப்பவர்களுக்கு என்னுடைய அரசியல் நிலைப்பாடு மிகத் தெளிவாகத் தெரியும். அந்தப் பேட்டி பின்வரும் இணையத் தளத்தில் கிடைக்கிறது: www.thisaigal.com/nov05/interviewuni.html எனினும் முத்தாய்ப்பாக அந்த நேர்முகத்தில் இருந்து ஒரு பந்தியை இங்கு தருவது பொறுத்தம்.

"கடந்த சில ஆண்டுகளாக ஈழத்து அரசியல் தீவிரமான இரண்டு முனைகளைக்

*கொண்டதாக மாறி விட்டது. ஒன்று புலி ஆதரவு, இன்னொன்று புலி எதிர்ப்பு. இந்த இரண்டுக்கும் இடையில் சுதந்தரமான கருத்துகளையும் சுதந்திரமான நிலைப்பாட்டையும் எடுப்பவர்கள் மீது மிகுந்த தாக்குதல்களும் விமர்சனங்களும் வைக்கப்படுகின்றன. செப்டம்பர் 11 தாக்குதல்களுக்குப் பிற்பாடு ஜார்ஜ் புஷ் சொன்னது போல, ஒன்று நீங்கள் எங்களுடன் அல்லது பயங்கரவாதிகளுடன் என்ற நிலைப்பாட்டையே இரு தரப்பினரும் எடுக்கிறார்கள்.*

*அரசியல் விமர்சனம் என்பதை கறுப்பு வெள்ளையாகத்தான் பார்த்து முத்திரை குத்துகிற அபாயம் தொடர்ந்தும் நிலவி வருகிறது. இது என் போன்றவர்களுக்கு மிகுந்த சிக்கலைக் கொடுக்கிறது. நீண்ட காலமாக மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் கட்சியோ அமைப்போ சாராத அரசியல் விமர்சனம் என்று இயங்கி வந்த பலர் இப்பொழுது இந்த இரண்டு முனைகளில் ஏதாவது ஒன்றில் போய் சேர்ந்து விட்டார்கள். தமிழ்த் தேசியம் என்கின்ற ஒரு பெரும் அலை, தனக்குள்ளே எந்தவகையான முரண்பாடுகளும் இல்லாத ஒற்றைப் பரிமாணம் கொண்ட ஒரே முகமானதாக இருக்க வேண்டும் என்று நம்புகிறவர்கள் பெருகி விட்டார்கள். இந்தச் சூழ்நிலையில் விடுதலையை அவாவுகிற சுதந்திரமான அரசியல் கருத்தாளனாக நிற்பது எனும் என்னுடைய நிலைப்பாடு பெரும் புயலுக்குத் தலை கொடுக்கின்ற பனை மரத்தின் நிலைதான்."*

*இந்த முக்கியமான கருத்துகளை இருட்டிப்பு செய்துவிட்டு எழுதுவது என்பது அறிஞர்களும் கலைஞர்களும் நிலவைச் சுட்டிக் காட்டுகிறபோது முட்டாள் சுட்டு விரலைத்தான் பார்ப்பான் என்பதுதான் நினைவுக்கு வருகிறது.*

*2. நாராயண சாமியின் டைகர்ஸ் ஆஃப் லங்கா என்னும் நூலில் சிவகுமாரன் பற்றி நான் தெரிவித்த அனுபவக் குறிப்பு ஒன்றைப் பற்றி எழுதுகிறபோது மகாதேவன் பின்வருமாறு சொல்கிறார்: "சிவகுமாரனின் வயது அப்போது 17 என்று சேரன்தான் தெரிவித்திருக்க வேண்டும்." இத்தகைய ஊகங்களும் பொய் கற்பிதங்களும்தான் அவருடைய கட்டுரையில் பெரிதும் விரவிக் கிடக்கின்றன.*

*மகாதேவன் சொல்வதுபோல, சிவகுமாரனும் நானும் ஒத்த வயதினன் என்ற மாயை நான் எழுப்பியதில்லை. நாங்கள் ஒத்த வயதினரும் அல்ல. 1974ம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்தபோது மாநாட்டின் தொண்டர் படையில் முக்கியமான ஒருவராகச் செயல்பட்டவர் சிவகுமாரன். அந்தத் தொண்டர் படையில் எங்கள் கிராமமான அளவெட்டியில் இருந்து இறைகுமாரன், உமைகுமாரன், கவிஞர் க.ஆதவன் ஆகியோரும் பங்காற்றியிருந்தார்கள். அந்தக் காலப் பகுதியில் ஆதவனுடன் கூடச் சென்று திரிவதே எனது வழமை என்பதால் எனக்கும் சிவகுமாரனைச் சந்திக்கிறது வாய்ப்பு வாயத்திருந்தது. அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் சிவகுமாரனுடைய உரையாடல் ஒன்றை நினைவுகொள்வதாகவே என்னுடைய அனுபவக் குறிப்பு அமைந்திருந்தது. அது மிகத் தெளிவாகவே நாராயண சாமி நூலில் எழுதப்பட்டுள்ளது. இதனைத் திரித்து சேறு பூச முற்படுவது காழ்ப்புணர்ச்சியும் பொறாமையும் சார்ந்தவையன்றி வேறு ஒன்றுமே அல்ல.*

*3. என்னுடைய வயது பற்றியும் இளமை பற்றியும் பெரும் அங்கலாய்ப்பு மகாதேவனுக்கு இருக்கிறது என்பது சுவாரஸ்யமாக இருக்கிறது. யுனெட்ட ரைட்டர்ஸ் வெளியிட்ட கொங்குதேர் வாழ்க்கை 2ம் தொகுதியில் (ராஜமார்த்தாண்டன் தொகுத்தது) கவிஞர்களைப் பற்றிய குறிப்பில் என்னுடைய பிறந்த ஆண்டு 1954 என்று தரப்பட்டிருக்கிறது. (இப்போது என்னையும் ரஷ்புடினையும் ஒப்பிடுவதில் மகாதேவனுக்கு எந்தவிதமான சிரமமும் இருக்காது என்று நம்புகிறேன்.) என்னுடைய மார்க்கண்டேயத்தனத்தில் அவ்வளவு அக்கறையும் ஆர்வமும் இருந்தால் என்னுடைய பிறப்புச் சான்றிதழையும் கடவுச்சீட்டையும் மகாதேவன் பார்வைக்குத் தரவேண்டும் என்று விண்ணப்பிக்கிறேன். இவ்வளவு தூரம் புலனாய்வில் ஈடுபடுபவர்களுக்கு இது பெரிய காரியமாக இராது அல்லவா?*

*4. எனக்கு நிரந்தரமான வேலையில்லை என்று மகாதேவன் அந்தரப்படவோ ஆதங்கப்படவோ எந்த அவசியமும் இல்லை. வின்சர் பல்கலைக்கழகத்தில் எனக்கு நிரந்தரமான நல்ல ஒரு பேராசிரியர் வேலை இருக்கிறது. இணைவலையில் மெல்லிய பழக்கம் உள்ளவர்கள்கூட கூகுல் போன்ற தேடுதல் தளங்களை என்னுடைய பெயரைப் போட்டுத்*

தேடினால் என்னைப் பற்றிய எல்லா விவரங்களுமே தானாகத் தெரிய வருகின்றன. இதற்கு எத்தகைய புலனாய்வும் தேவையில்லை.

நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும் இருந்தால் மகாதேவன் போன்றவர்கள் செய்ய வேண்டியது தமது முகமூடிகளையும் முகத் திரையையும் போலிப் பெயர்களையும் தூக்கி வீசி விட்டு நேருக்கு நேர் எழுதுவது. வெறுப்பும் காழ்ப்புணர்ச்சியும் காரணம் அறியாத கட்டற்ற கோபமும் அறிவுபூர்வமான கருத்தாடலுக்கு உதவாது. கவிஞர் சுரதா அவர்களின் வரிகளை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன் "மாடு முட்டி கோபுரங்கள் சாய்வதில்லை".

5. சென்ற ஆண்டு மாவீரர் தினத்தையொட்டி அண்டன் பாலசிங்கம் வழங்கிய உரை தொடர்பான எனது விமர்சன கட்டுரையொன்று கனடா ஈழநாட்டில் வெளியாகி இருந்தது. தேனீ இணையத் தளத்தின் கனடா நிருபர் அந்தக் கட்டுரையை மேற்கோள் காட்டாது பாலசிங்கத்தை விமர்சிப்பதனால் புலிகளின் அடுத்த பேச்சாளராக சேரன் மாற விரும்புகிறார் என்று கீழ்த்தரமான முறையில் எழுதியிருந்தார். அந்தக் கட்டுரையை உங்களுடைய இணையத் தளம் உவப்புடன் பிரசுரித்திருந்தது. அந்தக் கட்டுரையும் உங்கள் தளத்துக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அது பிரசுரிக்கப்படவில்லை. கட்டுரையை மீண்டும் இக்கடிதத்துடன் இணைத்துள்ளேன்.

நன்றி
சேரன்
27.4.2006